# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஏழாவது கூட்டத் தொடர்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

----

**மொத்த வினாக்கள் 10**

----

### வெள்ளத் தடுப்புச் சுவர்

*141 **திரு. சபா. இராசேந்திரன் (நெய்வேலி):**

மாண்புமிகு **நீர் வளங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஊராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் 600 மீட்டர் தூரத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

----

### கூட்டுக் குடிநீர் திட்டம்

*142 **திரு. பால் மனோஜ் பாண்டியன் (ஆலங்குளம்):**

மாண்புமிகு **நகராட்சி நிருவாகம்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) ஆலங்குளம் தொகுதி, கடையம், பாப்பாக்குடி, கீழப்பாவூர் ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட 163 கிராமங்கள் மற்றும் கீழப்பாவூர் பேரூராட்சி ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?
ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## நியாயவிலைக் கடை

*143 **திரு. பொ. அர்ஜுனன் (திண்டிவனம்):**

மாண்புமிகு **கூட்டுறவு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) திண்டிவனம் தொகுதி, தானங்குப்பம் ஊராட்சியில் உள்ள நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## குழந்தைகள் மையம்

*144 **திரு. செ. முருகேசன் (பரமக்குடி):**

மாண்புமிகு **சமூக நலன் - மகளிர் உரிமை** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) பரமக்குடி தொகுதி, கமுதி ஒன்றியம், அபிராமம் முத்துவிஜயபுரம் குடியிருப்பிலுள்ள குழந்தைகள் மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## சுற்றுலாத் தலம்

*145 **திருமதி எஸ். தேன்மொழி (நிலக்கோட்டை):**

மாண்புமிகு **சுற்றுலா** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) அணைப்பட்டி அருள்மிகு ஆஞ்சனேயர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

*146 **திரு. ஆ. வெங்கடேசன் (சோழவந்தான்):**

மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ)

சோழவந்தானில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?
ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## பேருந்து வசதி

*147 **திரு. ப. அப்துல் சமது (மணப்பாறை):**

மாண்புமிகு **போக்குவரத்து** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- மணப்பாறையிலிருந்து முசிறி மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

----

## மகளிர் கலைக் கல்லூரி

*148 **திரு. சா. மாங்குடி (காரைக்குடி):**

மாண்புமிகு **இந்து சமய மற்றும் அறநிலையங்கள்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?ஆ) ஆம் எனில், எப்போது ?

----

## மாணவர் விடுதி

*149 **திரு. J.L. ஈஸ்வரப்பன் (ஆற்காடு):**

மாண்புமிகு **பிற்படுத்தப்பட்டோர் நலன்** துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :- ஆற்காடு தொகுதி, வாழைப்பந்தல் கிராமத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

----

## தொழிற்பயிற்சி நிலையம்

*150 **திரு. மு. பன்னீர்செல்வம் (சீர்காழி ):**

மாண்புமிகு **தொழிலாளர் நலன் - திறன் மேம்பாடு** துறை

அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :-

அ) சீர்காழி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

ஆ) ஆம் எனில், எப்போது ?

----

**சென்னை**-600009. **முனைவர் கி. சீனிவாசன்** ,

2 **ஏப்ரல்**, 2025. **முதன்மைச் செயலாளர்**